

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 11 ஊராட்சிகளுக்கு குப்பை சேகரிக்கும் வாகனங்களை 06.11.2025 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.




நாமக்கல்லில் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி. சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் அமைச்சர் மா.மதிவேந்தன், தொகுதி பொறுப்பாளர் நன்னியூர் ராஜேந்திரன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கடந்த மூன்று ஆண்டுகளில் 6,453 மெட்ரிக் டன் கொள்முதல்:

# கேழ்வரகு கொள்முதல் இம்மாதம் முதல் தொடர்ந்து நடைபெறும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, நவ.10-

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 3578 விவசாயிகளுக்கு ரூ. 26.48 கோடி வழங்கப்பட்டுள்ளது எனவும் நவம்பர் மாதம் முதல் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் தொடர்ந்து செய்யப்படும் எனவும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-



பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கேழ்வரகு கொள்முதல் திட்டம், கடந்த 2022-2023 கொள்முதல் பருவத்தில் முதற் கட்டமாக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. இரண்டாம் கட்டமாக 2023-2024 கொள்முதல் பருவத்தில் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களையும் சேர்த்து, 4 மாவட்டங்களில் மொத்தம் 1,889 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2024-2025 கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளில் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 3578 விவசாயிகளுக்கு ரூ. 26.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு நவம்பர் மாதத்திலிருந்து, விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.48860 என்ற ஆதார விலையில் (Minimum Support Price) கொள்முதல் செய்யப்படும்.

நடப்பு 2025-2026- கொள்முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறந்து விவசாயிகளிடமிருந்து 6000 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் கொள்முதல் விலையான மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.42900 என்பதை விட இந்த ஆண்டு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5960 கூடுதலாகும்.

ஆதலால் இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட கேழ்வரகு விவசாயப் பெருங்குடி மக்கள், தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தங்கள் மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

## கழக அரசின் மீது அவதூறுப் பிரச்சாரம்: எதிர்க்கட்சிகளின் முகமூடி மக்களிடம் நாளும் கிழிபட்டுக் கொண்டிருக்கிறது!

# பெண்கள் பாதுகாப்பு குறித்த எடப்பாடியின் அற்பத்தனம் அம்பலமானது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

**சென்னை, நவ.10-**

**பெண்கள் பாதுகாப்பு குறித்த எடப்பாடியின் அற்பத்தனம் அம்பலமானது என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக இல்லை என்கிற செய்தி எப்படியாவது செவியில் எட்டிவிடாதா? என்கிற காத்திருப்பில் விஷமப் பிரசாரத்தை நாள்தோறும் நடத்திக் கொண்டிருக்கின்றனர் எடப்பாடியும் இன்னும் சில எதிர்க் கட்சிகளும்!

ஒரு குற்றம் நடந்தவுடனே அதை வைத்து எப்படி அரசியல் ஆதாயம் தேடலாம் என்று அற்பப் புத்தியோடு செயல்பட்டு வரும் எதிர்க்கட்சிகளின் அரைவேக்காட்டுத்தனத்தைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறது கோவை நிகழ்வு.

கோவை சாலையில் நடந்து சென்ற பெண் காரில் கடத்தப்படுவதாகவும், சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த ஆறாம் வகுப்பு மாணவி ஒருவர் மாயமாகி உள்ளதாகவும் அதனால் தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லை என்று உண்மை நிலை தெரிவதற்கு முன்பே முந்திரிக் கொட்டையாக வந்து அயோக்கியத்தனமான அறிக்கையை வெளியிட்டார் 'பச்சைப் பொய்' பழனிசாமி. கோவை நிகழ்வில் காவல்துறை தீவிரமான விசாரணையை மேற்கொண்டது. அந்தச் சம்பவம் குடும்பத் தகராறில் ஏற்பட்டது என தெரிய வந்தது. "என்னை யாரும் கடத்தவில்லை" என அந்தப் பெண் வீடியோ மூலம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.



இதே போல நேற்று முன் தினம் இரவு காணாமல் போன கண்ணகி நகர் மாணவியைத் தனிப்படை அமைத்து காலை 6.30 மணிக்கே காவல்துறை மீட்டு வீட்டில் ஒப்படைத்து விட்டது. உண்மைகள் இப்படியிருக்கத் தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக இல்லை என பழனிசாமி விஷமப் பிரச்சாரம் செய்ததற்கு வெட்கித் தலைகுனிய வேண்டும். எடப்பாடி பழனிசாமி வழியில் அன்புமணி ராமதாஸ், நயினார் நாகேந்திரன் போன்றவர்களும் உண்மை அறியாமல் தங்களது அரசியல் சுயலாபத்தி ற்காகப் பெண்களின் பாதுகாப்பை அரசியல் பகடைக்காயாக உருட்டிக் கொண்டிருப்பதைத்தான் அற்பத்தனமான அறிக்கைகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன.

தி.மு.க. அரசுக்கு எந்த வகையிலாவது களங்கம் கற்பிக்கலாம் என நினைத்து இதுபோன்ற அவதூறு பிரச்சாரத்தை மேற்கொள்ளும் எதிர்க்கட்சிகளின் முகமூடி ஒவ்வொரு நாளும் மக்களிடம் கிழிபட்டுக் கொண்டிருக்கிறது. பெண்களின் நலனையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயலாற்றிவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அவர்களது பாதுகாப்பில் எந்தச் சமரசத்துக்கும் இடம்கொடுக்காது. அது திரும்பத் திரும்ப நிரூபணம் ஆகிக் கொண்டேதான் இருக்கும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மயிலாடுதுறையில் எஸ்.ஐ.ஆர் க்கு எதிராக நாளை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*மயிலாடுதுறை, நவ. 10-*

*தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாளை (நவம்பர் 11 ஆம் தேதி) அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்) கொண்டு வந்துள்ளது.சிறுபான்மையினர் வாக்கு கள், பட்டியல் இன மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய் திடமுயன்றிருப்ப தோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர் திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்ப தாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ. ஆர்.)வின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல்ஆணையம் திட்டமிடுகிறது. எனவே, இந்த எஸ்.ஐ.ஆர் சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை*



*செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில்இந்தியத் தேர்தல் ஆணையம் உள்ளது. தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்) கொண்டு வந்துள்ளதை கண்டித்து 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நாளை (11 ம் தேதி செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி அருகே மயிலாடுதுறை தலைமை தபால் நிலையம் முன் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது. இந்த கண்டன ஆர்பாட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர், தொண்டர்கள், திராவிட முன்னேற்ற கழகதின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் , இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் வெற்றி பெற செய்திட வேண்டும்.*

*இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா முருகன் எம். எல்.ஏ., தெரிவித்துள்ளார்.*

## கிருஷ்ணகிரி படேதலாவ் ஏரியில் இருந்து

# 13 ஏரிகளுக்குச் செல்லும் கால்வாய்களை தூர்வாரும் பணி!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

*கிருஷ்ணகிரி, நவ.10-*

*கிருஷ்ணகிரி அடுத்த காட்டிநாயனப்பள்ளி ஊராட்சியில் சுமார் 163 ஏக்கர் பரப்பளவில் படேதலாவ் ஏரி அமைந்துள்ளது. இந்த படேதலாவ் ஏரி 50 சதவீதம் நிரம்பியதால் ஏரியில் இருந்து பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 13 ஏரிகளுக்கு நீர் செல்லும் கால்வாய்களை மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் திணேஷ்குமார், ஆகியோர் படேதலாவ் ஏரியில் தூர்வாரும் பணியை துவக்கி வைத்தனர்.*

*இதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் கூறும்போது,*

*கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை சிறப்பாக பெய்ததால் அந்த மழை நீரை ஏரிகளில் நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது பல்வேறு இடங்களில் சி எஸ் ஆர் நிதியின் மூலம் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு ஏரிகள் நிரப்பப்பட்டு வருகிறது. பாலேகுளி முதல் சந்தூர் வரை உள்ள 28 ஏரிகளை நிரப்புவதற்கு சி.எஸ். ஆர். நிதி மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக படேதலாவ் ஏரிக்கு வரக்கூடிய நீரை 13 ஏரிகளில் நிரப்புவதற்காக 18 கிலோ மீட்டர் தூரம் உள்ள கால்வாய்களை சி எஸ் ஆர் மூலம் தூர்வாரும் பணி துவங்கப்பட்டுள்ளது. இதில் கிரேன், ஹிட்டாச்சி, மினி ஜேசிபி உள்ளிட்ட 15 வாகனங்கள் பயன்படுத்தப் பட்டு தூர்வாரப்பட்டு வருகிறது. தடதடா ஆறு, நாச்சிகுப்பம் ஆறு, மார்க்கண்டேயன் நதி மூலம் மாரசந்திரம் அணைக்கு நீர் வந்து படேதலாவ் ஏரி நிரம்புகிறது. மேலும் ஒரு 40 மில்லியன் கன அடி நீர் ஏரிக்கு வந்தால் அதிலிருந்து தண்ணீர் வெளியேறி 13 ஏரிகளுக்கு செல்லும். இந்த கால்வாய் தூர்வாரும் பணி இரண்டு வாரங்களில் முடிவடையும் என்றார். மேலும் எண்ணே கொள்புதூர் கால்வாய் பணிகள் அடுத்த ஆண்டு வட கிழக்கு பருவமழைக்குள் பணிகள் முடிவடைந்து தென்பெண்ணை ஆற்று நீர் படேதலாவ் ஏரிக்கு கொண்டு வரப்படும் என தெரிவித்தார்.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குரள், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில், மாவ ட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.*




நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மற்றும் நாளை நாமக்கல்லில் தமிழ்நாட்டில் மத்திய ஆளும் பாஜக அரசால் கொண்டுவரப்பட்டுள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வைக் (S.I.R) கண்டித்து நடக்க உள்ள ஆர்ப்பாட்டம் குறித்து ஆலோசிக்க திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கழக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி ஆகியோர் உடுமலைப்பேட்டை நகர கழகத்தின் சார்பில் பேருந்து நிலையம் அருகில் வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக மகளிர் அணி துணை செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன், நகர கழக செயலாளர் செ.வேலுச்சாமி உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.